விலை: 50.00
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

சங்கு 23
ஒலி 179 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 02 வியாழக்கிழமை (16.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## பெற்றோல், டீசல் வட மாகாணத்தில் இன்று விநியோகிக்கப்படும் இடங்கள்

(யாழ்ப்பாணம்)

எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் பெற்றோல், டீசல் இன்று விநியோகிக்கும் இடங்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ளது.

குறிப்பிட்ட ஒரு செயலி மூலம் எரிபொருள் விநியோகிக்கப்படும் இடங்களை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒவ்வொரு நாளும் வெளியிடவுள்ளது.

அந்த வகையில், வட மாகாணத்தில் இன்று 95 ரக 15

## அரசியல் விளையாட்டால் ஆபத்தில் 21 ஆவது திருத்தம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

அரசியல் விளையாட்டுக்களால் ஆபத்தில் 21 ஆவது திருத்த சட்டம் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிறேமதாஸ தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சரின் 21 ஆவது திருத்தம் அரசாங்கத்தின் 21 ஆவது திருத்தம் எதிர்க்கட்சியின் 21 ஆவது திருத்தம் என எதுவும் இல்லை எனவும் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் தனி நபர் 15

## நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு உதவுவேன்

### அமெரிக்க ஜனாதிபதி பைடன்



(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்குத் தேவையான ஒத்துழைப்புக்களை நல்குவேன் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் வழங்கக் கோரி நாட்டின் பல பகுதிகளில் மக்கள் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

எரிபொருளினை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி நாட்டின் பல பகுதிகளில் நேற்று ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதனிடையே தமக்கான எரிபொருளை உரிய முறையில் பெற்றுத்தருமாறு கோரி யாழ்ப் 15

## ஆள முடியாவிட்டால் பதவி விலகுங்கள்

### பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்



(கொழும்பு)

நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாத ஆட்சியாளர்கள், பதவிகளில் நீடிக்காது, விலக வேண்டும் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கை 15

## பிரச்சினைக்கு தீர்வுகாண ஆட்சி மாற்றம் அவசியம்

### கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்



(கொழும்பு)

"நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் ஆட்சி மாற்றம் மிகவும் அவசியம்" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை 15

## அரிசி, பருப்பு, சீனி, உருளைக்கிழங்கு உள்ளிட்ட மேலும் சில பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும்

### இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் சந்தைகளில் அரிசி, பருப்பு, சீனி, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என அத்தியாவசிய உணவுப்பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. 15

## பணம் செலுத்தினால் மட்டுமே எரிபொருள்

### புதிய நடைமுறை அமுல்

(கொழும்பு)

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள காசோலை வசதி உடனடியாக நிறுத்தப்பட்டு, பணம் செலுத்தப்பட்ட பின்னர் எரிபொருளை விநியோகிக்கும் முறைமை நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக அகில இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கத்தின் இணைச் 15

## ரூ.200 விலை அதிகரிப்பை கோரியுள்ளோம்

### லிட்ரோ தலைவர்

(கொழும்பு)

சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகளை 200 ரூபாயினால் அதிகரிக்குமாறு அதிகாரிகளை கேட்டுக்கொண்டுள்ளதாக 15

## மே 9 வன்முறைகள் தொடர்பில் விசாரணைகள் நடத்த ஐ.நாவில் வலியுறுத்து

(கொழும்பு)

மே 9 வன்முறைகள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பாக அமையப்பெற்ற 7 நாடுகளின் குழு இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளது.


ஜெனீவாவில் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் பொலிஸ் அமைச்சரானால்

# அரசிலுள்ள அனைவரையும் சிறையில் அடைக்க நேரிடும்

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவிப்பு



*(கம்பஹா)*

**நான் பொலிஸ் அமைச்சரானால் அரசாங்கத்தில் உள்ள அனைவரையும் சிறையில் அடைக்க நேரிடும் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

கம்பஹாவில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் நிலைமை தொடர்பாக பிரதமரிடம் எந்தத் திட்டமும் இல்லை.

அரசாங்கம் மக்களை நிரந்தரமாக ஏமாற்றி வருகிறதெனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இதன்போது, பிரதமரின் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியேற்று ஊழல்வாதிகளை தண்டிக்க விருப்பம் இல்லையா? எனக் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர், "நான் பொலிஸ் அமைச்சரானால் முதலில் இந்த அரசாங்கத்தில் உள்ள அனைவரையும் சிறையில் அடைக்க வேண்டும். அதுதான் பிரச்சினை.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்பாகவே நான் பிரதமராக பதவியேற்க வேண்டும் என்று கூறப்பட்டது.

அப்போது எனக்கு எந்த நிபந்தனையும் இருக்கவில்லை.

செய்ய வேண்டிய திட்டம் பற்றிப் பேசினேன். அந்தத் திட்டத்திற்கு ஜனாதிபதி உடன்படவில்லை.

இதனையடுத்து, ரணிலுக்கு பதவி வழங்கப்பட்டது. எனினும் அவர் எதுவுமே செய்யாமல் இருக்கிறார்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# பதில் வெளிவிவகார அமைச்சராக தினேஷ்

(கொழும்பு)

பதில்வெளிவிவகார அமைச்சராக தினேஷ் குணவர்த்தன நேற்று அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக தினேஷ் குணவர்த்தன பதவி வகித்து வருகின்றார்.

இருப்பினும், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஜெனிவா சென்றுள்ள நிலையில், பதில் வெளிவிவகார அமைச்சராக தினேஷ் குணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். (ம-7)



## விலாசம் விசாரிப்பதுபோல் பாசாங்கு செய்து

# வீட்டிலிருந்த பெண்ணை தாக்கி சங்கிலி அபகரிப்பு

## கிளிநொச்சியில் சம்பவம்

(முறிகண்டி)

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்த நபர் ஒருவர் வீட்டிலிருந்த பெண்ணை தாக்கி சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

சம்பவதினமன்று வீட்டுக்குள் நுழைந்த நபர் வீட்டிலிருந்த பெண்ணிடம் விலாசம் ஒன்றைக் காண்பித்து விசாரித்துள்ளார்.

பின்னர் வீட்டிலிருந்து வெளியேறுவதுபோல் சென்றுவிட்டு பின்னர் திரும்பி ஓடிவந்து பெண் அணிந்திருந்த 2 பவுண் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடியுள்ளார்.

இதன்போது குறித்த பெண் சங்கிலியை அறுக்கவிடாது தடுத்த நிலையில் பெண்ணை மூர்க்கத்தனமாக தாக்கி விட்டு சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பி ஓடியுள்ளார்.

சம்பவத்தில்படுகாயமடைந்த பெண் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,100)

# நாட்டில் இன்று முதல் புதிய போக்குவரத்து திட்டம்

(கொழும்பு)

நாட்டில் இன்று முதல் புதிய போக்குவரத்துத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் பொருளாதார மற்றும் நாளாந்த நடவடிக்கைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இது முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட அமைச்சர் பந்துல குணவர்த்தன, நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்சினை காரணமாக பெரும்பாலானோர் ரயில் போக்குவரத்தைப் பயன்படுத்தி வருகின்றார்கள் என்றும் இதனால் புதிய திட்டத்தின் கீழ் கூடுதலான ரயில்களை சேவையில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-7)


## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக பருத்தித்துறை சமுர்த்தி வங்கியில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **ம.சாந்தி** அவர்களுடைய அன்புத் தந்தையார்

அமரர் **முருகேசு மயில்வாகனம்**

அவர்கள் 15.06.2022 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.



தோற்றம் 18.10.1946 மறைவு 15.06.2022

துயர் பகிர்வில்...

**பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும்**
**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**பிரதேச செயலகம், பருத்தித்துறை.** (C-4496)


# வைத்தியர் ஷாபிக்கு சந்திரிகா பாராட்டு



(கொழும்பு)

குருநாகல் வைத்திய சாலையின் மகப்பேறு மற்றும் பெண்நோயியல் பிரிவின் விசேட வைத்தியர் ஷாபி ஷிகாப்தீன், தான் பணி இடைநிறுத்தப்பட்டிருந்த காலத்திற்காக தனக்கு வழங்கப்பட்ட வேதனத்தை அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு வழங்கியுள்ளமைக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக ஊடக பதிவில் கருத்து வெளியிட்டுள்ள அவர், பொறாமை, வெறுப்புணர்வை போர்த்திக் கொண்ட சிங்கள தீவிரவாதத் தின் வெட்கக்கேடான அத்தியாயம் சிறந்த தொழில்சார் நிபுணரின் வாழ்வை சிதைத்துவிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

வைத்தியர் ஷாபி மீது உமிழப்பட்ட வெறுப்பிற்கு வைத்தியர் ஷாபி வழங்கியுள்ள பதிலிற்காக பாராட்டுக்களை தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறைந்த வருமானம் பெறும் விவசாயக் குடும்பங்களுக்கு
# இலவச யூரியா

(கொழும்பு)

**குறைந்த வருமானம் பெறும் ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திற்கும் இலவச யூரியா உரப் பொதியை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

இந்த விடயம் தொடர்பாக உணவு மற்றும் விவசாய அமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளதாக விவசாய மற்றும் வன விலங்கு பாதுகாப்பு அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதன்படி, குறைந்த வருமானம் பெறும் விவசாயக் குடும்பங்களுக்கு 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு மகா பருவத்தில் 365,000 யூரியா உர மூடைகள் இலவசமாக வழங்கப்படும் என விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-6)

## மருந்து தட்டுப்பாடு 6 வாரங்களுக்குள் முடிவிற்கு வரும்
### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் மருந்து தட்டுப்பாடு அடுத்த ஆறு வாரங்களுக்குள் முடிவுக்கு வரும் என சுகாதார அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு தேவையான நிதி கிடைத்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தற்சமயம் 14 அத்தியாவசிய மருந்துகள் போதுமான அளவு கையிருப்பில் இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், நாடு முழுவதும் 186 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

தட்டுப்பாடு நிலவும் மருந்துகள் விரைவில் இறக்குமதி செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

## டீசல் தட்டுப்பாட்டால் 3 ஆயிரம் பேருந்துகளே சேவையில்

(கொழும்பு)

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் 20,000 தனியார் பேருந்துகளில் 3,000 மட்டுமே தற்போது சேவையில் ஈடுபடுவதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். நாளைக்குள் தேவையான எரிபொருள் வழங்கப்படாவிட்டால் தனியார் போக்குவரத்து பேருந்து சேவைகள் முற்றாக நிறுத்தப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (நி-6)

## இரண்டு வாரங்களிற்கு பின்னரே எரிவாயு கப்பல் வரும்
### லிட்ரோ தலைவர்

(கொழும்பு)

இரண்டு வாரங்களிற்கு பின்னரே மீண்டும் எரிவாயு கப்பல் இலங்கைக்கு வரும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

முன்னைய தலைமைத்துவம் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடாததாலும் விநியோக விதிமுறைகளிற்கு ஏற்ப கட்டணங்களை செலுத்த முன்வராததாலும் கடல்கள் இன்று காலியாக உள்ளன.

உண்மை நிலவரத்தை பொதுமக்களிற்கு தெரியப்படுத்த வேண்டியது எனது கடமை அடுத்த தொகுதி எரிவாயு வருவதற்கு 14 நாட்கள் எடுக்கும் என அவர் தெரிவித்தார். (நி-6)

## அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 68 பேர் திருமலையில் கைது

(திருமலை)

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா நோக்கி செல்ல முற்பட்ட 68 பேர் நேற்று திருகோணமலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-6)

## சீனா வழங்கும் அரிசியில் 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி மாணவர்களின் மதிய உணவிற்கு

(கொழும்பு)

சீனாவிடமிருந்து 500 மில்லியன் யுவான் பெறுமதியுடைய அரிசி தொகை 6 கட்டங்களாக இலங்கைக்கு வழங்கப்படவுள்ளதாக சீனத்தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த அரிசி தொகையில் 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை பாடசாலைகளில் மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்காக உபயோகிக்கவுள்ளதாக சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. (நி-6)


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 07 - 11 - 1982 விண்ணில் 19 - 05 - 2022



மண்ணில் 04 - 12 - 1954 விண்ணில் 30 - 06 - 2021



**அமரர்.தங்கவேலாயுதம் மயூரன்**

(தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி திணைக்களம், பருத்தித்துறை)

நேற்றுவரை எங்களுக்கு நெஞ்சுரத்தை தந்துவிட்டு
காற்றென விரைந்தீரே! கவலையிலே மிதக்கின்றோம்
ஆற்றிட முடியாத... இழப்புந்தன் இழப்பாச்சு
தேற்றிட வழியில்லை தேம்பியே அழுகின்றோம்
கூற்றுவன் சதியிலே உந்தன் உயிர் போயாச்சு
ஆற்றல்... மிக்கவனே! அமைதியாய் நீ தூங்கு!

**அமரர்.தங்கவேலாயுதம் தவமணிதேவி**

திதி - 19.06.2022

மின்னலென மறைந்தபோது மனதெல்லாம் வலியாச்சு
எண்ணி உனை நினைத்து ஏங்காத நாளில்லை
கண்ணில் காயாத கவலைதனை சுமக்கின்றோம்
விண்ணில் போவதற்கு விரைந்தாயே ஏன் தானோ!
முன்னே நீ செல்ல பின்னே மகன் வந்தான்
என்ன கொடுமையதோ ஏனிந்த வேதனையோ!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அமரர்.தங்கவேலாயுதம் மயூரன் அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகள் எதிர்வரும் 17.06.2022 நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்பட்டு மு.ப. 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இடம்பெறும். அத்துடன் 19.06.2022 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (11885)

பத்திரகாளி கோவிலடி,
பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.

இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

☎-077 615 4447

இங்ஙனம்,
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது குருநகர் பாடும்மீன் அணி



வல்வை விளையாட்டுக் கழகம் தனது வைரவிழா வினை முன்னிட்டு மறைந்த வீரர்கள் ஞாபகார்த்தமாக நடத்தும் 9 பேர் கொண்ட மாபெரும் வடமாகாண ரீதியில் நடைபெறும் உதை பந்தாட்ட போட்டி வல்வை திருவில் மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இப்போட்டியில் பலம் வாய்ந்த இரு அணிகளான குருநகர் பாடும் மீன் அணியும் மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதியது. ஆட்டம் பரபரப்பாக ஆரம்பித்தது. பாடும்மீன் அணியின் அதிரடியான ஆட்டத்தில் 2 கோலினை போட்டதும் உத் வேகமாக இரு அணிகளும் மோதியது. ஞானமுருகன் அணியினர் ஒரு கோலினைப் போட்டதும் ரசிகர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இறுதியில் பாடும்மீன் அணி 2:1 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் அணியை வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது. பாடும்மீன் அணியின் சாந்தன், கீதன் ஆகிய இருவரும் தலா ஒவ்வொரு கோலினை போட்டனர். ஆட்ட நாயகனாக அணித் தலைவர் தினேஷ்குமார் தெரிவு செய்யப்பட்டார். (4-106)

# இலங்கையை வீழ்த்தியது ஆஸி

இலங்கை அணிக்கு எதிரான முதலாவது சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி டக்வேத்-லூயிஸ் முறையில் 2 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 300 ஓட்டங்களைப் பெற்றது.

இதனை அடுத்து 301 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி அவுஸ்திரேலிய அணி பதிலுக்கு துடுப்பெடுத்தாடியது.

இருப்பினும் மழை குறுக்கிட்டதால் போட்டி 44 ஓவர்களாக குறைக்கப்பட்டு வெற்றி இலக்கும் 282 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் சகலதுறை வீரர் மக்ஸ்வெல் ஆட்டமிழக்காமல் 80 ஓட்டங்களை குவிக்க 42.3 ஓவர்களில் அவுஸ்திரேலிய அணி வெற்றி இலக்கை கடந்தது. (4)

## மாகாண மெய்வல்லுநர் போட்டிக்கு

# மன்னாரிலிருந்து இரு மாணவர்கள்



மன்னார் மாவட்டத்தின் கீழ் உள்ள பாடசாலைகளுக்கான 2022 ஆம் ஆண்டுக்கான வலயமட்ட மெய்வல்லுனர் திறனாய்வுப்போட்டி மன்/முருங்கன் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற நிலையில் மன்/உயிர்த்தராசன்குளம் றோ.க.த.க.பாடசாலை மாணவர்கள் இருவர் இரண்டாம் இடத்தைப் பெற்று மாகாண மெய்வல்லுனர் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். குறித்த வலய மட்ட மெய்வல்லுனர் போட்டியில் 14 வயதுக்குட்பட்ட ஆண்கள்பிரிவு, 16வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு, உயரம் பாய்தல் போட்டியில் மன்/உயிர்த்தராசன் குளம் றோ.க.த.க.பாடசாலை மாணவர்கள் A.ஆகாஷ், S.விஜய் ஆகியோர் 2 ஆம் இடத்தைப் பெற்று மாகாண மெய்வல்லுனர் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

நீண்டகாலத்திற்கு பின்னர் ம/உயிர்த்தராசன் குளம் றோ.க.த.க. பாடசாலையிலிருந்து மாகாணமட்ட போட்டிக்கு இரு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-285)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2639

**சரண்**



நம்பக் கூடாதவனை
நம்பிக் கெடுவது தவறு
நம்பக் கூடியவனை
நம்பாமல்
கெடுவதும் தவறு
- கண்ணதாசன் -

**ராஜி**

எப்புடிடா இவ்வளவோ சாப்புடுற ஆனா
ஒல்லியாவே இருக்க



அதெல்லாம் சொல்றதுக்கு இல்ல இரகசியம்



**யசோந்த்**

நான் பணிந்து போவதால்
கோழை என்று
எண்ணி விடாதே என்
பலத்தை காண்பிக்க
நீ தகுதியானவன் இல்லை
என்று அர்த்தம்

**தீபிகா**



பகைவனை விடஅடக்கமில்லாத மனமே
ஒருவனுக்கு அதிக
தீமைகளை கொடுக்கின்றன

**அஜேசன்**

எவரிடம் அளவிற்கு அதிகமாக
தவறுகள் உள்ளதோ
அவரே மற்றவர்கள் மீது
தேவையற்ற வீண்பழிகளை
சுமத்தி தன்னை
உத்தமர் போல் காட்டிக்
கொள்வர்கள்

**நிரோதிகா**


சுகங்களைப்
பகிர்ந்து கொள்ளும்
அன்பை விட
சோகங்களை
பகிர்ந்து
கொள்ளும்
அன்பு
என்றும்
உண்மையானது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்.பண்டிதர் பேரின்பநாயகம் ஐயாவின் இரங்கற்பா



வாராது வந்த மாமணியாய்
வளர் சமயத் தமிழ்ப் பணியில்
தீராத இறைபக்தி திருநீற்றுப் பூச்சுடன்
ஏழாலை திருவூரின் மைந்தனுமாய்
பேரான நாச்சிமார் கோவிலடி மருமகனாய்
பேரின்ப நாயகம் ஐயா அவர்கள்
சீரார்ந்த செவ்விய வாழ்வு வாழ்ந்தார்
சேர்ந்தார் சிவன் பாதம் சிறந்து

திருமுறை உணர்ந்தோதும் சிறப்பும்
தேர்ந்த நல் குரல்வளக் கனிவும்
அருள்மிகு ஆண்டவன் தாள் நினைப்பும்
அணி சேர்ந்த பண்டிதரான நிமிர்வும்
பெருங்கலை பௌராணிக வழிமரபும்
பேச்சாற்றல் மிகு சமயப்பணியும்
பொருந்திய பேரின்ப நாயகம் ஐயா
பொருந்தினார் புண்ணியச் சிவன் பாதம் சிறந்து

இணுவை சைவ சித்தாந்தப் பயிற்சி மையத்து
இனிதான திருமுறை ஆசானாய்
கனிவுடை தன் குரலினால், கருத்தால்
காத்திரமான கற்பித்தலைச் செய்து
மணியொலி நாதமாய்த் தமிழ் மறையோதி
மனங்கள் யாவையும் கொள்ளை கொண்டு
மனிதருள் மாணிக்கமாய் விளங்கினார்
மறைந்தார் மாசிவன் பாதம் சிறந்து

தேவார முற்றோதல் அரங்கு நிறைந்து
திருமுறைச் சிறப்பை எங்கும் உணர்த்தி
வாயாரத் தமிழ் மறை பாடிப்பரவி
வாழ்ந்து வழிகாட்டிய அற்புதப் பிறவி
ஆதாரம் ஆன சைவத்தமிழ்ச் சிறப்பை
அனுதினமும் வளர்த்த ஆளுமையுடன் சிவனின்
பாதார விந்தங்களை அடைந்தார் சிறந்து
பணிந்தோம் அவராத்மா அடையட்டும் சாந்தி.

(11861)

ஆக்கம்
கவிஞர் கு.வீரா
பயிலுநர்
விரிவுரையாளர்களும் பயிலுநர்களும்
திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த /திருமுறை
நேர்முகப்பயிற்சி மையம், இணுவில் / கொழும்பு.

## பாடசாலைக் கட்டடம் மீது மரம் முறிந்து விழுந்து மாணவர்கள் காயம்

(கொழும்பு)

பாடசாலை கட்டடத்தின் மீது தென்னை மரமொன்று முறிந்து விழுந்தமையினால் காயமடைந்த 10 மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெலிமடை இந்துக் கல்லூரியில் நேற்றுக் காலை இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. பாடசாலைக்கு அருகிலுள்ள காணியில் இருந்த தென்னை மரமொன்று முறிந்து வகுப்பறையின் மீது விழுந்துள்ளது. இதன்போது தரம் 6 இல் கல்வி கற்கும் 10 மாணவர்கள் காயமடைந்த நிலையில் வெலிமடை பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பில் வெலிமடை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6)

# கண்ணீர் காணிக்கை



யா/நீர்வேலி அத்தியார் இந்துக்
கல்லூரி ஓய்வுநிலை ஆசிரியரும்
அதிபருமான வடகோவை மைந்தன்
உயர்திரு.**பூ.க.இராசரத்தினம்**
அவர்கள் 11.06.2022 இல் இறை
பதமடைந்தமை குறித்து மேற்படி
கல்லூரிப் பழைய மாணவர்களின்
**கண்ணீர்க் காணிக்கை**
கல்விப்பணிக்கே காலமெல்லாம்
சேவை செய்தார். ஆசிரியப்பணியுடனே
அதிபர் பணியும் செய்து நின்றார்.
உடலும் உள்ளமும் உயர்ந்திட்ட உத்தமன். இடரினும் இளைக்காத
உள்ளம் கொண்டோன். கல்விப் பணியுடனே உடற் கல்வியும் உயர
வைத்தோன். ஆங்கிலமும், அரசியலும் போதித்த ஆசான். நிர்வாகத்
திறமை கொண்ட நிறைவான அதிபராவார். பார் போற்றும் பணியை ஊர்
போற்றச் செய்த செம்மல். மாணவர் உள்ளங்களில் மங்கா இடம்பெற்ற
பெரியோன். சமூகப் பணியெல்லாம் செய்திட்ட சான்றோன். கூட்டுறவு
பணியைக் கூடவே செய்தோன். பண்பினால் உயர்ந்த மாணவர்
கண்கள் நீர் சொரிய கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.
ஆத்மா சாந்திக்காய் ஆண்டவனைத் துதிக்கின்றோம்.
அடைக சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (11882)

பழைய மாணவர்கள்
யா/அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்.**நவரத்தினம் சரஸ்வதி**
(ஆலங்கேணி பூநகரி)



நாட்கள் முப்பத்தொன்று
ஓடி மறைந்தாலும்
உங்கள் உயிர்மூச்சு
மறைவதில்லை!
ஓராயிரம் யுகங்கள்
ஓடி ஒழிந்தாலும்
உங்கள் நினைவுகள்
ஒழிவதில்லை!

**தோற்றம் : 1932.08.03**
**மறைவு : 2022.05.17**

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்

(11890)

ஆலங்கேணி,
பூநகரி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத்தை பாதுகாப்பதற்கு சிறந்த தீர்மானங்களை எடுங்கள்

## வலி.கிழக்கு தவிசாளர் நிரோஷ்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் உடனடியாக விவசாயிகளுக்கு எரிபொருள் விநியோகத்தை சீர்செய்வதுடன் விவசாயத்தினைப் பாதுகாப்பதற்கு சிறந்த தீர்மானங்களை எடுக்க வேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் தி.நிரோஷ் தெரிவித்தார்.

அச்சுவேலி பிரதேச கமக்காரர்கள் விவசாயத்திற்கான எரிபொருள் தேவையினை வலியுறுத்தி நேற்று புதன்கிழமை காலை அச்சுவேலி சந்தையில் கையெழுத்துப் போராட்டத்தினை ஆரம்பித்தனர்.

அப் போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், நாடு மிகவும் நெருக்கடியான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இன்றைய காலகட்டக்கணிப்பின் பிரகாரம் எதிர்வரும் வாரங்களில் உணவுப்பொருட்கள் கிடைக்கிமோ என்ற அச்சத்தில் மக்கள் வாழ்கின்றனர்.

அரசாங்கம் உணவுப் பாதுகாப்பினையும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை மக்களுக்கு நியாய விலையில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற பொறுப்பினையும் நிறைவேற்ற தவறியுள்ளது.

இயற்கை வழி உரப்பாவனையுடன் கூடிய விவசாய முயற்சிகளை நாம் வரவேற்கும் அதேவேளை குறுங்காலத்தில் இயற்கை உரப்பாவனையை அடிப்படையாகக் கொண்ட விவசாயத்தினை நாட்டில் வெற்றியடையச் செய்ய முடியுமா என படித்தவர்களிடமும் ஆய்வாளர்களிடமும் ஜனாதிபதி ஆலோசனை கேட்டிருக்க வேண்டும்.

விவசாயிகள் தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முடியாத சூழல் விவசாய உற்பத்தியாளர்களை மாத்திரம் பாதிக்கும் தொழில்சார் பிரச்சினை கிடையாது. மாறாக அத்தனை மக்களது வயிற்றுப்பசியைப் போக்குவது சார்ந்த பிரச்சினையாகும். அரசாங்கம் தாமதமின்றி இவ்விடயத்தில் பொறுப்புச் சொல்லவேண்டும் என தெரிவித்தார். (4-6-33)

### எரிபொருள் பெற்றுத்தர கோரி

# அச்சுவேலி விவசாயிகள் கையெழுத்து போராட்டம்



(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பிரதேச கமக்காரர்கள் விவசாயத்திற்கான எரிபொருள் தேவையினை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டத்தினை ஆரம்பித்து உள்ளனர்.

அச்சுவேலி சந்தையில் நேற்று புதன்கிழமை காலை இந்த கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டு மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளது. (4-6-33)



சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா கடந்த திங்கட்கிழமை ஆயிரக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாக இடம்பெற்றது. (படம் : ரவிசாந்)

# திருடப்பட்ட 20 லட்சம் பெறுமதியான கட்டடப்பொருட்கள் மீட்பு

## சந்தேக நபர் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் பகுதியில் திருடப்பட்ட 20 லட்சம் ரூபா பெறுமதியான கட்டடப் பொருட்கள் கோப்பாய் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.



கடந்தவாரம் கோண்டாவில் பகுதியில் வீட்டில் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான மாபிள்கள், மாபிள் உபகரணங்கள், மின் மோட்டார் மற்றும் மின் வயர்கள்,இலத்திரனியல் உபகரணங்கள் உள்ளடங்கலாக சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டமை தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் திருடப்பட்ட பொருட்களை மீட்டுள்ளனர். அத்துடன் சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர். (4-6-33)




புலோலியூர் தமிழ் அறிஞர்களில் ஒருவரான தமிழ்த்தாத்தா என அழைக்கப்படும் கந்தமுருகேசனாரின் 57ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை மந்திகையில் அனுஷ்டிக்கப்பட்டது. (படம் : மகாலிங்கம்)

# பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

நீதிமன்றத்தால் நான்கு தடவைகள் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர் ஒருவரை கொடிகாமப் பொலிஸார் நேற்று முன்தினம் செவ்வாய க்கிழமை கைது செய்துள்ளனர்.

கொடிகாமம்-தவசிக்குளம் பகுதியில் வைத்து கடந்த திங்கட்கிழமை இரவு இளைஞன் ஒருவரை வெட்டிக் காயப்படுத்திய குற்றச்சாட்டின் அடிப்படையில் கொடிகாமப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ள நபர் ஒருவருக்கே இவ்வாறு நீதிமன்றத்தால் நான்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)



யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் ஆசிரியருமான தமிழருவி சிவகுமாரனிற்கு அவரது மேன்மை மிக்க பன்முகப் பணிகளுக்காக "வாழ்நாள் சாதனையாளர் விருது" வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சொல்லாடல் நிகழ்ச்சியில் இவ்விருது அவருக்கு வழங்கப்பட்டது.

# யாழ்.பல்கலையால் நடத்தப்படும் ஆங்கில பாட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் பிரதான பாடங்களில் ஒன்றாக மாணவர்கள் தெரிவு செய்யக் கூடிய ஆங்கில பாடம் தொடர்பாக வடமாகாணத்திலே கல்வி பயிலும் மாணவர்கள் மத்தியிலே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையிலான கருத்தரங்கு ஒன்றினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இக் கருத்தரங்கு நாளை மறுதினம் 18 ஆம் திகதி 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ்.பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

2022, 2023, 2024 ஆகிய வருடங்களிலே இடம் பெறவிருக்கும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகளிலே ஆங்கில பாடத்துக்கு (பொது ஆங்கிலம் அல்ல) தோற்றவிருக்கும் மாணவர்கள், தற்போது தரம் 10 மற்றும் தரம் 11 இலே கல்வி பயிலும், எதிர்காலத்திலே உயர்தரத்தில் ஆங்கிலப் பாடத்தினைத் தமது பிரதான பாடங்களிலே ஒன்றாகத் தெரிவு செய்ய விரும்பும் மாணவர்கள் அல்லது இந்தப் பாடம் தொடர்பாக மேலும் அறிந்துகொள்ள விரும்பும் மாணவர்கள், உயர்தர வகுப்பு ஆங்கிலப் பாடத்திலே ஆர்வமாக இருக்கும் ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர் போன்றோர் இந்தக் கருத்தரங்கிலே பங்கேற்க முடியும் என யாழ்.பல்கலை ஆங்கில இலக்கியத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ம.திருவரங்கன் அறிவித்துள்ளார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA

**Global NIHR-AF Project, Faculty of Medicine, University of Jaffna.**

**Post of Data Collector, Phlebotomist, Laboratory Assistant and Data Collecting Assistant**

University of Jaffna, Sri Lanka has embarked on a medical research programme on Global Health Research on Atrial Fibrillation Management Project in partnership with University of Birmingham, UK Funded by National Institute of Health Research (NIHR), UK.

**01. Data Collector**
**Vacant – 03 posts**

**Requirements:**

- A Bachelor degree from UGC approved University or Higher Education Institution.
- Preference will be given to those who have experience in health research related and e-based data collections.

**Remuneration:** A monthly salary of LKR 40,000.00 will be paid.

**02. Phlebotomist**
**Vacant – 02 posts**

**Requirements:**

- Relevant educational qualification for the post.

or

Experience in blood withdrawal especially using vacutainer technique, labelling of bio samples, waste disposal using standard professional competencies and experience in both health & research filed.

- Preference will be given to those who have experience in both health & research fields.

**Remuneration:** A monthly salary of LKR 40,000.00 will be paid.

**03. Laboratory Assistant**
**Vacant – 02 posts**

**Requirements:**

- Relevant educational qualification for the post.

or

Minimum of 10 years post qualifying experience in maintaining good laboratory practice, centrifuging, preparation, pipetting, labelling and storing of bio samples using standard professional competencies.

- Preference will be given to those who have experience in both health & research fields.

**Remuneration:** A monthly salary of LKR 40,000.00 will be paid.

**04. Data Collecting Assistant**
**Vacant – 07 posts**

**Requirements:**

- Should have passed the G.C.E. A/L examination with three passes.
- Preference will be given to those who have experience in health research related and e-based data collections.

**Remuneration:** A monthly salary of LKR 30,000.00 will be paid.

**General notes to all the above posts:** Please refer the University of Jaffna website- www.jfn.ac.lk

Applicants are requested to send their applications duly filled in the prescribed application form downloaded from the University website along with copies of the educational certificates and any other relevant certificates in proof of qualifications and experience via registered post to reach the **Country Lead, Global NIHR – AF Project, Department of Community & Family Medicine, Faculty of Medicine, University of Jaffna.** Applicants are expected to submit their application forms with the scanned copies of all the relevant documents (mentioned above) through the E-mail (afsl@univ.jfn.ac.lk) on or before 29.06.2022.
For further details, please refer the University of Jaffna website - www.jfn.ac.lk

Registrar (C-4497)


# அரிசி மோசடி தொடர்பில் முறையிட தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)

செயற்கையாக அரிசித்தட்டுப்பாட்டை உருவாக்கும் பாரிய அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும். அல்லது சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என ஐக்கிய நெல் உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

சந்தையில் தற்போது நிலவும் அரிசித் தட்டுப்பாடு செயற்கையானது என அதன் தலைவர் முதித் பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை, அரிசியை மறைத்து அதிக விலைக்கு விற்கப்படும் இடங்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக நுகர்வோர் விவகார அதிகார சபை தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

அலுவலக நேரத்தில் 1977 என்ற குறுகிய எண்ணில் முறைப்பாட்டை தெரிவிக்கலாம். (நி-6)


## கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ-து) மூளாய் பதவி வெற்றிடங்கள்

❖வைத்திய உத்தியோகத்தர் (SLMC Registration) பதவி வெற்றிடம்

எமது வைத்தியசாலையில் முழு நேரமாக கடமையாற்றுவதற்கு தகுதியான SLMC பதிவுடைய வைத்திய உத்தியோகத்தரிடம் இருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன. தேவைக்கேற்ப தங்குமிட வசதி கருத்திற் கொள்ளப்படும்.
விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ (E.mail) 25.06.2022 முன் அனுப்பி வைக்கவும். நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு இடம்பெறும்.

தலைவர் கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ-து).
மூளாய், சுழிபுரம்
E-mail : moolaii@yahoo.com

தொடர்புகளுக்கு :- 021 225 0441
077 744 8080 (MS)

**Co-operative Hospital Society Ltd, Moolai.**

❖A Vacancy for a Mediacal Officer (SLMC Registration)

Suitable applications are invited for Medical Officer with SLMC Registration to the above vacancy at our Moolai Co-operative Hospital on full time basis.
Accommodation will be considered depending on requirement, if required.
Kindly requested to forward the application by registered post or e-mail on or before 25th June, 2022.

President,
Co-operative Hospital Society Ltd,
Moolai, Chulipuram.
E.Mail : moolaii@yahoo.com

Contacts : 021 225 0441
077 744 8080 (MS)

(C-4498)



## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 19.05.2022 அன்று
இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### அமரர். கார்த்தி அதிகாரம்



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 16.06.2022 இன்று வியாழக்கிழமை அதிகாலை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி தொண்டைமானாறு கடற் கரையில் கரைக்கப்படும். வீட்டுக் கிரியைகள் 18.06.2022 சனிக் கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விக்னேஸ்வரா வீதி,
[illegible]டி தெற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.

(11885)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 72

# கண்ணதாசனின் கடைசி கவி!



"கண்ணே கலைமானே
கன்னி மயிலெனக்
கண்டேன் உனை
நானே..."

கவிஞர் கண்ணதாசன் எழுதிய கடைசிப் பாடல் இதுதான் என்று இத்தனை நாள் எண்ணிக் கொண்டிருந்தேன். எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருந்தேன்.

ஆனால், தற்செயலாக கண்ணில் பட்ட ஒரு தகவல், நமது எண்ணம் தவறென எடுத்துக் காட்டியது. சினிமாவுக்காக கண்ணதாசன் கடைசியாக எழுதியது "மூன்றாம் பிறை" பாடல் தான்.

ஆனால், தமிழுக்காக தமிழர்களுக்காக கண்ணதாசன் எழுதிய கடைசிக் கவிதை... இதோ, அது பற்றிய ஒரு தகவல். உடல் நலமில்லாமல் அமெரிக்க மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் கண்ணதாசன்.

அந்த சமயத்தில் அமெரிக்காவில் வாழும் தமிழ் அன்பர்கள் சிலர் தங்கள் குழந்தைகளோடு கண்ணதாசனைக் காண மருத்துவமனைக்கு வந்திருந்தார்கள். ஆசையுடன் அந்தக் குழந்தைகளோடு கண்ணதாசன் தமிழில் உரையாட, அவருக்கு அதிர்ச்சி அங்கே காத்திருந்தது.

வந்த எந்த தமிழ் குழந்தைக்கும் ஒழுங்காக தமிழில் பேசத் தெரியவில்லை.

கண்ணதாசன் அந்த அமெரிக்க தமிழர்களிடம் ஆழ்ந்த மன வருத்தத்துடன் கேட்டாராம் :

"தமிழர்களாகிய நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு தமிழை சொல்லித் தர வேண்டாமா ?"

எனக் கேட்ட கண்ணதாசன் அமெரிக்க மருத்துவமனையில் இருந்த அந்த வேளையிலேயே எழுதிய அழகிய கவிதை ஒன்று.

"மனிதரில் ஒன்றுபட்டுச் சேர்ந்திருப்பீர் - இங்கு
மழலைகள் தமிழ் பேச செய்து வைப்பீர்
தமக்கென கொண்டு வந்ததேதுமில்லை - பெற்ற தமிழையும் விட்டுவிட்டால் வாழ்க்கையில்லை!"

இதுவே கண்ணதாசனின் கடைசிக் கவிதை !

கண்ணதாசன் தமிழுக்கு, தமிழர்களுக்கு தான் செய்ய வேண்டிய கடமையை, கவிதையாய் எழுதி தன் கணக்கை முடித்துக் கொண்டு போய் விட்டார். "அவன்தான் மனிதன்" படத்திற்காக கண்ணதாசன் எழுதிய வரிகள் என் நினைவுக்கு வருகின்றன.

"கொடுக்க எதுவுமில்லை என் குழப்பம் முடிந்ததடா
கணக்கை முடித்து விட்டேன் ஒரு கவலை முடிந்ததடா
மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று
இறைவன் நினைப்பதுண்டு பாவம் மனிதனென்று."

**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# ரஷ்ய - உக்

# பின்னடைவை சந்

## உக்ரைன் கிழக்கு பகுதிக்

(கீவ்)

**உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து 4 ப விட்டது. ஆனாலும் இன்னும் போர் முடிவு இருந்தபோதிலும் ரஷ்யாவின் மும்முனை த னில் பல நகரங்கள் ரஷ்யா வசம் வீழ்ந்து வி**

தற்போது உக்ரைனின் கிழக்கு பகுதியான டான்பாஸ் பிராந்தியத்தை கைப்பற்றும் முயற்சியில் ரஷ்யா தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. அங்குள்ள தொழில் நகரமான செவிரோடோ டொனட்ஸ்க்கின் 80 சதவீத பகுதிகளை ரஷ்யா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டது.

மீதமுள்ள 20 சதவீத பகுதிகளை பிடிக்க தொடர் தாக்குதலில் ரஷ்யா இறங்கி உள்ளது. அந்த நகரில் உள்ள அசோட் இரசாயன ஆலையில் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் தஞ்சம் அடைந்து உள்ளனர். இந்த ஆலை மீது ரஷ்ய படையினர் கடும் தாக்குதலை மேற்கொண்டு உள்ளனர்.

மேலும் செவிரோடோ டொனட்ஸ்க் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள 3 முக்கிய பாலங்களை ரஷ்யப் படையினர் தகர்த்தனர். இதனால் அந்தப் பகுதியில் போக்குவரத்து முற்றிலும் துண்டிக்கப்பட்டு



(கம்போடியா)

நீதிமன்ற விசாரணைக்கு அமெரிக்க சுதந்திர தேவி சிலை போன்று ஆடை அணிந்து வந்த கம்போடிய அமெரிக்க பெண் செயற்பாட்டாளர் ஒருவருக்கு தேசத் துரோக குற்றச்சாட்டில் 6 வருட சிறைத்தண்டனை விதித்து கம்போடிய நீதிமன்றமொன்று தீர்ப்

# 80 அடி ஆழமான அ

## கிணற்றில் விழுந்த சிறுவன் உ

(டில்லி)

இந்தியாவின் சதீஸ்கார் மாநிலத்தின் ஜாங்கிரி - ஷம்பா மாவட்டத்தில் உள்ள பிஹ்ரிட் கிராமத்தில், 80 அடி ஆழமான ஆழ்துளை கிணற்றில் விழுந்த சிறுவன் 104 மணித்தியால போராட்டத்தின் பின்னர் நேற்று முன் தினம் இரவு உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

11 வயதான ராகுல் சாஹு என்ற சிறுவன், கடந்த வெள்ளிக்கிழமை தமது வீட்டுக்கு அருகில் உள்ள பயன்பாடற்ற நிலையில் இருந்த 80 அடி ஆழமான ஆழ்துளை கிணற்றுக்குள் தவறி வீழ்ந்துள்ளார்.

இதையடுத்து, தேசிய பேரிடர் பதிலளிப்பு படையினர், இராணுவத்தினர், மருத்துவக்குழுவினர், பொது மக்கள் என பல்வேறு தரப்பினர் சிறுவனை மீட்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஆழ்துளை கிணற்றுக்குள் குழாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரைன் போர் தீவிரம்

## ...ந்திக்கும் உக்ரைன் படைகள்


### ...க்கான தொடர்பை துண்டித்தது ரஷ்யா

**...4 மாதங்களை தாண்டி ...வுக்கு வந்தபாடில்லை. ...ன தாக்குதலால் உக்ரை... விட்டது.**

உள்ளது. இதன் காரணமாக உக்ரைன் படையினர் மேலும் முன்னேற முடியாமல் பின்னடைவை சந்தித்து வருகிறார்கள்.


போர் தொடங்குவதற்கு முன்பு சுமார் 1 லட்சம் பேர் வசித்து வந்த செவிரோடோ டொனட்ஸ்க் நகரில் தற்போது 12 ஆயிரம் பேர் தங்கி உள்ளனர். முக்கிய பாலங்கள் அனைத்தும் தகர்க்கப்பட்டு உள்ளதால் அந்த மக்கள் அங்கிருந்து வெளியேற முடியாமல் தவித்து வருகிறார்கள்.

அவர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கூட கிடைக்க முடியாத சூழ்நிலை உருவாகி உள்ளதாக உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். ரஷ்யப் படைகள் இறுதி தாக்குதல் நடத்தி வருவதால் அந்த நகரம் இன்னும் ஓரிரு நாளில் வீழ்ந்து விடும் என்ற நிலை உருவாகி உள்ளது.



லுஹர்மான்ஸ் மாகாணத்தில் உக்ரைன் கட்டுப்பாட்டில் உள்ள கடைசி பெரிய நகரமான செவிரோடோ டொனட்ஸ்க்கை கைப்பற்றி விட்டால் அந்த மாகாணம் முழுவதும் ரஷ்யப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும் என கூறப்படுகிறது. (நி-6)

## ரஷ்ய நிகழ்வுகளில் கலந்து கொள்ள தடைவித்தது கனடா



(ஒட்டாவா)

கடந்த 12ஆம் திகதி ரஷ்யர்கள் தமது தேசிய விடுமுறை நாளை மிகவும் கொண்டாட்டகரமான முறையில் அனுபவித்திருந்தனர்.

மேலும் ரஷ்ய தூதுவர்கள் தமது பணியிடங்களிலும் மேற்படி தினத்தினை கொண்டாடுவது வழக்கமான ஒன்று.

இந்நிலையில் கனடாவில் உள்ள ரஷ்ய தூதுவ பணியகத்தில் நடைபெற்ற விடுமுறை கொண்டாட்டத்தில் கனடா பணியாளர்கள் கலந்து கொண்டமைக்கு கனடா பிரதமர் கடும் எதிர்ப்பையும் தடையுத்தரவையும் பிறப்பித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (நி-6)

## சுதந்திரதேவி சிலை வேடத்தில் நீதிமன்றிற்கு வந்த குற்றவாளி

பளித்துள்ளது.

நாடு கடந்த நிலையில் வாழ்ந்து தாய்நாடு திரும்பத் தவறிய அந்நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் சாம் ரெயின்ஸியுடன் தொடர்புபட்டிருந்த குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட .60 பேரில் தியறி செங் (51 வயது) என்ற மேற்படி செயற்பாட்டாளரும் ஒருவராவார்.

இந்த நீதிமன்றத் தீர்ப்பை வெட்கக்கேடான ஒன்று என தியறி செங் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நான் எனது சுதந்திரம் மற்றும் நீதிக்கான நம்பிக்கையை விடுத்து வாழ்வதை விடவும் சிறையில் இருக்கத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

துணிச்சலாக கருத்துகளை வெளியிடும் செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான அவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சுதந்திர தேவி சிலை அணிந்திருப்பதைப் போன்று பச்சை நிற ஆடையும் கிரீடமும் அணிந்து வந்து அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தார். இந்நிலையில் அவர் பொலிஸாரால் அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டார். (நி-6)

## ...ஆழ்துளை ... உயிருடன் மீட்பு

மூலம் சிறுவனுக்கு ஒட்சிசன் வாயுவை அனுப்பிய மருத்துவக்குழுவினர் தொடர்ந்து சிறுவனை கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 4 நாட்களாக இடம்பெற்ற பாரிய மீட்புப் பணிகளின்மூலம், குறித்த சிறுவன் நேற்று முன்தினம் உயிருடன் மீட்கப்பட்டு, பிலாஸ்பூரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி-6)

## உக்ரைன் மீது தாக்குதல் நடத்திவரும் ரஷ்யப் படை மிகவும் மூர்க்கத்தனமானது

### –போப் பிரான்சிஸ் தெரிவிப்பு–

(வத்திக்கான்)

உக்ரைன் மீது தாக்குதல் நடத்தி வரும் ரஷ்யப் படை மிகவும் மூர்க்கத்தனமானது என போப் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுடான போரில் கடுமையான விளைவுகளையும் இழப்புக்களையும் சந்தித்து வரும் உக்ரைன் கடந்த சில நாட்களாக ஆயுதப் பற்றாக்குறை காரணமாக வலுவான எதிர்த்தாக்குதலைத் தர முடியாமல் திணறி வருகிறது.

அமெரிக்கா உக்ரைனுக்கு ஆயுதங்களையும் அதிநவீன ஏவுகணைகளையும் அனுப்பி வைத்தும் ரஷ்யாவிற்கு சரியான பதிலடியினை கொடுக்க முடியவில்லை.



உக்ரைனின் 30 சதவீதமான பகுதிகளை ஆக்கிரமித்ததுடன் லுஹான்ஸ்க் பிராந்தியத்திலுள்ள சியெவெரோடொனட்க்ஸ் நகரை முழுமையாகக் கைப்பற்றுவதில் ரஷ்யா மிகுந்த தீவிரம் காட்டி வருகிறது.

இதுவரை இதற்காக சண்டையிட்டு வரும் தங்கள் நாட்டுப் படையினருக்கு உதவுவதற்காக, கூடுதல் படையினரை ரஷ்யா் அனுப்பி படைபலத்தை அதிகரித்துள்ளது.

இந்நிலையில், உக்ரைன் போர் குறித்துப் பேசிய போப் பிரான்சிஸ் 'ரஷ்யாவின் படைகள் மிகவும் மிருகத் தன்மையும் கொடூரமும் கொண்டவை யாராவது உக்ரைன் மீது போர் தொடுக்க தூண்டியிருக்கலாம்' எனத் தெரிவித்துள்ளார். (நி-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் இருந்தும் மின்சாரம் இல்லை

## மூன்று மணிநேரம் காத்திருந்த பொதுமக்கள்

(நெளுக்குளம்)

**வவுனியா ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் இருப்பில் இருந்தும் மின்சாரம் தடைப்பட்டமையால் மூன்று மணித்தியாலயங்கள் தாமதத்தின் பின்னர் எரிபொருள் வழங்கப்பட்டது.**



வவுனியாவில் நேற்று காலை அனேக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மாத்திரம் வழங்கப்பட்டு வந்தது. இதனால் பெற்றோலை பெற்று கொள்வதற்காக நீண்ட வரிசையில் பொதுமக்கள் கூடி நின்றனர். எனினும் காலை8.30 மணியளவில் மின்சாரம் தடைப்பட்டமையால் எரிபொருள் நிரப்பும் செயற்பாட்டில் தாமதம் ஏற்பட்டது. இதனால் வரிசையில் நின்ற பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்தனர்.

எனினும் காலை 11 மணியளவில் மின்சாரம் வந்ததும் மீண்டும் எரிபொருள் நிரப்பும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. (4-6-29)

# உண்ணும் உணவின் அளவை குறைத்துள்ள இலங்கை மக்கள்

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

கடும் பொருளாதார நெருக்கடி, உணவுப் பொருட்களின் விலை உயர்வு, உணவுப் பற்றாக்குறை, வருவாய் இழப்பு போன்ற காரணிகளால் இலங்கையர்களில் 66 வீதமான வர்கள் தினசரி உண்ணும் உணவின் எண்ணிக்கையை குறைத்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாதம் 17 மாவட்டங்களில் உள்ள ஏழ்மையான குடும்பங்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட உணவு பாதுகாப்பு மதிப்பீட்டாய்வின் பிரகாரம் இந்தத் தகவலை உலக உணவுத் திட்டம் வெளியிட்டுள்ளது.

இலங்கையர்கள் 86 வீதம் பேர் மலிவான உணவையும் 95 வீதம் பேர் குறைந்த விலையிலான குறைவான சத்துள்ள உணவை வாங்குவது போன்ற சமாளிப்பு வழிமுறைகளைப் பயன்படுத்துகின்றனர்.

83 வீதம் பேர் உணவின் அளவு களை கட்டுப்படுத்துகின்றனர். 66 வீதம் பேர் உணவு எண்ணிக்கை அளவைக் குறைத்துள்ளனர். அதாவது 3 நேரம் உண்போர் அதனை 2 வேளையாக குறைத்துள்ளனர்.

இலங்கை 1948 இல் சுதந்திரம் பெற்ற பின்னர் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர் கொள்கிறது. உணவு மற்றும் எரிபொருளுக்கான தட்டுப்பாடு மற்றும் உணவுப் பொருட்களின் அதியுச்ச விலைகள் ஆகியவற்றுக்கு மத்தியில் தங்கள் அன்றாட உணவு மற்றும் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்ய மக்கள் போராடுகின்றனர். (நி-6)

# எரிபொருள் தட்டுப்பாடு மீன்பிடி தொழில் பாதிப்பு



(மன்னார்)

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டு பிரச்சினை காரணமாக தொடர்ந்து பொருட்களின் விலை அதிகரித்து வருகின்றது இந்த நிலையில் மண்ணெண்ணெய் இன்மையால் மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீன்களின் விலைகளும் அதிகரித்துள்ளது

மீன்பிடி நடவடிக்கைக்கு என மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுவதால் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது அதே நேரம் எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாகவும் சந்தையில் மீன் விலை அதிகரித்துள்ளது. இதனால் மீனவர்கள் உட்பட மீன் சந்தையில் மீன் வியாபாரத்தில் ஈடுபடும் மீன் வியாபாரிகளும் பாதிப்படைந்துள்ளனர்.

மீன்பிடி இன்மை மற்றும் மீன் வியாபாரம் தொடர்ச்சியாக குறைந்துள்ளமையினால் மீன் சந்தைகளை குத்தகை ரீதி யாக பெற்று நடாத்தும் குத்தகை தாரர்களும் வருமானம் இன்றி பாதிப்படைந்துள்ளனர். (4-6-285)



மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. இதன் போது கரகம் எடுத்து நேர்த்திக் கடன்கள் நிறைவேற்றப்பட்டன.

(படம்: மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வழக்கத்தை விட உள்வாங்கிய இராமேஸ்வரம் கடல் பகுதி




(மன்னார்)

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுக கடல் பகுதி வழக்கத்தை விட நேற்று காலை உள்வாங்கி உள்ளதால் அப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நாட்டுப்படகுகள் தரைதட்டி உள்ளதோடு, அடிக்கடி கடல் உள்வாங்கியதால் மீனவர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக தொடர்ந்து கடல் உள்வாங்கி வந்த நிலையில் கடந்த வாரம் கடல்மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பியது ஆனால் தற்போது நேற்று காலை முதல் தொடர்ந்து கடல் உள்வாங்கியதால் மீனவர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. (4-6-285)

# அபாயகரமாக மாறியுள்ள கிளி.திருவையாறு பாலம்

## புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை



(முறிகண்டி)

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் பாலத்தில் விரிசல் ஏற்பட்டதால் அப்பாதை அபாயகரமாக மாறியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரணைமடு நீர்ப்பாசன வாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள குறித்த பாலம் அமைக்கப்பட்டு நீண்ட ஆண்டுகள் கடந்துள்ளன. இந்த நிலையில் குறித்த பாலம் உடைந்து அபாயகரமான பாலமாக தோற்றம் பெற்றுள்ளது.

குறித்த பாலம் ஆரம்பத்தில் சுண்ணாம்புக் கல்லினைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. நீண்ட காலத்திற்கு முன்னர் குறித்த பாலம் அமைக்கப்பட்டுள்ளமையால் அது படிப்படியாக சேதமடைய ஆரம்பித்து இன்று மக்கள் போக்குவரத்து செய்வதில் அச்ச நிலையை தோற்றுவித்துள்ளது.

இப் பாலத்தின் ஊடாக ஆயிரக்கணக்கானோர் பயணம் செய்வதாகவும், கனரக வாகனங்கள் உள்ளிட்டவையும் பயணிப்பதாகவும் பிரதேச மக்கள் தெரிவிப்பதுடன், அபாயகரமான நிலையிலேயே பிரயாணங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (4-6-100)

# கிளிநொச்சியில் குழு மோதல் 13 பேர் மருத்துவமனையில்

(தருமபுரம்)

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற குழு மோதலில் 13 பேர் காயமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராமநதபுரம் பகுதியில் மணல் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை காரணமாக இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் இறுதியில் மோதலில் முடிந்தது.

இதனால் 13 பேர் காயமடைந்து கிளிநொச்சி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-316)

# காகிதம், அச்சிடும் பொருட்களுக்கு

# 65 மில்லியன் டொலர் தேவை

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

**அடுத்த வருடத்திற்கான காகிதம் மற்றும் அச்சுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு 65 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர்,

இலங்கை காகிதத்தை இறக்குமதி செய்கிறது. உள்நாட்டில் காகிதத்தை உற்பத்தி செய்வதில்லை எம்பிலிப்பிட்டி மற்றும் வாழைச்சேனை தொழிற்சாலைகளில் இதற்கு முன்னர் உற்பத்தி இடம்பெற்றது. அச்சகங்கள் மற்றும் அரச அச்சக கூட்டுத்தாபனத்துடன் பேசி அடுத்த வருடத்திற்கான தேவைகள் குறித்து கலந்துரையாடியுள்ளோம். இந்த வருடத்திற்கு தேவையான வளங்கள் போதுமானது எனவும் அமைச்சர் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாடப்புத்தகங்கள், பயிற்சிப் புத்தகங்கள், தேர்வுத் தாள்கள் மற்றும் பிற தேவைகளுக்கு 65 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாகக் குறிப்பிட்ட அமைச்சர், அமைச்சகத்திற்கு காகிதம், அச்சுப் பொருட்கள் மற்றும் மை தேவை என்றும் தெரிவித்தார். இந்த மதிப்பீடுகள் திறைசேரி, வர்த்தக அமைச்சு மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்தார். (நி-6)

# மணமக்களுக்கு பெற்றோல் அன்பளிப்பாக வழங்கி வைப்பு



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற திருமண வைபவம் ஒன்றில், புது மணமக்களுக்கு பெற்றோல் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

குறித்த புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வெகுவாக பகிரப்பட்டு வருகிறது. இலங்கையில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அனைத்து பொருட்களும் உச்ச விலையில் விற்கப்படுகிறது. அத்துடன், எரிபொருள், எரிவாயு, மண்ணெண்ணெய் என அத்தியாவசிய பொருட்களுக்கும் தட்டுப்பாடு நீடிக்கின்றது. இவ்வாறான நிலையில், தங்கத்துக்கு நிகராக பெற்றோல் பரிசை மணமக்களுக்கு வழங்கியுள்ளமை பலரை சிரிக்க வைத்துள்ளதோடு, சிந்திக்கவும் வைத்துள்ளது. (நி-6)

## அவுஸ்திரேலியா செல்வதாகக் கூறி

# லட்சக்கணக்கில் பணம் வாங்கி விட்டு காட்டிக் கொடுக்கும் கடத்தல்காரர்கள்

(கொழும்பு)

இளைஞர்களைச் சட்டவிரோதமாகப் படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு கூட்டி செல்வதாகப் பலரிடம் லட்சக்கணக்கில் பணம் வாங்கிவிட்டு கடத்தல்காரர்களே பாதுகாப்புப் படையினருக்கு தகவல்களை வழங்குவதாகத் தெரியவந்துள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டை விட்டு வெளியேறும் சட்டவிரோத இடப்பெயர்வாளர்கள் பற்றிய தகவல்கள் நாட்டில் அதிகமாகப் பதிவாகியுள்ளன.

கடந்த 2 மாத காலத்தில் மாத்திரம் 200 க்கும் மேற்பட்ட சட்டவிரோத இடப்பெயர்வாளர்களை பொலிஸார்கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி -6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 280 | 320 |
| உருளைக்கிழங்கு | 240 | 250 | 240 | 280 |
| பச்சைமிளகாய் | 400 | 600 | 500 | 550 |
| தக்காளி | 800 | 650 | 700 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 140 |
| கோவா | 350 | 400 | 350 | 400 |
| கரட் | 240 | 380 | 400 | 450 |
| பூசணி | 160 | 160 | 160 | 160 |
| புடோல் | 250 | 200 | 240 | 320 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 200 | 220 | 200 | 240 |
| பாகற்காய் | 600 | 500 | 700 | 600 |
| வெண்டக்காய் | 180 | 200 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 230 | 240 | 200 |
| பயற்றங்காய் | 350 | 350 | 350 | 320 |
| லீக்ஸ் | 200 | 240 | 360 | 300 |
| பீற்றூட் | 350 | 300 | 300 | 400 |
| கறிமிளகாய் | 400 | 400 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 1200 | 1000 | 800 | 1200 |
| போஞ்சி | 800 | 650 | 700 | 800 |
| கத்தரிதம்புள்ள | 280 | 200 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 80 | 100 |
| தேசிக்காய் | 600 | 400 | 400 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 50-70 |
| இராசவள்ளி | 180 | 300 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 600 | 450 | 500 | 600 |
| முள்ளங்கி | 180 | 200 | -- | 250 |
| பொன்னாங்கண்ணி | 60 | 80 | 100 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | 80 | 150 |

# எரிபொருள் வழங்கக் கோரி தெஹிவளையில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

எரிபொருள் வழங்குமாறு கோரி, தெஹிவளையில்நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பிரதான வீதியை மறித்து குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுவதால், கொழும்பு- காலி வீதியில் இரு பக்கங்களிலும் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இதனால், காலை வேளையில் அலுவலகங்களுக்கு செல்பவர்கள் கடும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

தெஹிவளையில் மட்டுமன்றி, கொழும்பில் பல இடங்களிலும் எரிபொருள் வழங்குமாறு கோரிநேற்று ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# இராசிபலன்

16.06.2022
ஆனி 02, வியாழக்கிழமை
துதியை பிற்பகல் 1.04 மணிவரை

பூராடம் பிற்பகல் 4.09 மணிவரை
சுபநேரம் 7.23-8.53 மணிவரை
இராகுகாலம் 1.23-2.53 மணிவரை

சந்திராஷ்டமம் - ரோகினி,மிருகசீரிடம்.

வளவன்




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், ரோக பயமுண்டு, மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.




உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், வழிபாடு சிறப்பினைத் தரும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.




சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




தொழில் ரிதியான பயணங்கள் இடம் பெறலாம்,பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சயன சுகக்குறைவான நாள்.




உடல் நலனில் கவனம் எடுக்க வேண்டிய நாள், அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வரவைக் காட்டிலும் விரயங்கள் மேலோங்கும் நாள்.




வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும், புண்ணிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.




குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், வாக்கு மேன்மையுண்டு, நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.




உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




நட்பு வட்டம் விரிவடையும் நாள்,பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்,கௌரவமான நாள், காரிய அனு கூலமுண்டு, போசன சுகமுண்டு.




பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும்,மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.




மற்றவர்களின் மன நிலையை மறந்து செயற்படுவது நல்லது, ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, இரவு-பகல் பாராது பாடுபடுவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகாரிக்கும் நாள்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில் வளர்ச்சி கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

உண்மையும் எண்ணெயும் எப்போதும் அடியில் தங்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அம்புலிமாமா

## இசையும் உணவும்



அவனும் அதன்படி செய்யவே நல்ல இலாபம் கிடைத்தது. அவன் உள்ளூரிலேயே ஒரு பட்சணக் கடை வைத்து நடத்தலானான். தினமும் கோபாலன் வந்தவர்களை வீட்டிற்கு அழைத்துப் போய் பாடிக் காட்டலானான்.

ஆரம்பத்தில் வந்த கூட்டம் நாளுக்கு நாள் குறையலாயிற்று. பிறகு தினம் ஒருவன் தான் அவன் பாட்டைக் கேட்க வரலானான். அவன் பாட்டைக் கேட்பதை விட அவன் விற்கும் தின்பண்டங்களையே எல்லோரும் விரும்பினார்கள்.

இதனால் உற்சாகமிழந்து பாட்டியிடம் அவன் யோசனை கேட்க அவளும் "நீ தினமும் பாடாதே, வாரத்திற்கு ஒருமுறை பாடு. அதுவும் பஜனை என்று கூறி கூட்டம் கூட்டு" என்றாள். கோபாலனும் பஜனைக்கு ஏற்பாடு செய்தான். ஆனால் அது முடியும் போது எல்லோரும் சுண்டல் வாங்கிக் கொண்டு "ஆகா! பிரசாதம் வெகு ஜோர்" என்று சொல்லிக் கொண்டே போனார்கள். கோபாலன் சோர்ந்து போனான், அப்போது பாட்டி "உன் கையில் நல்ல வித்தை இருக்கிறது. நீ பட்டணத்திற்குப் போய்பட்சணக் கடையை ஆரம்பி. அங்கு உனக்கு நிறையப் பணமும் கிடைக்கும். உன் பாட்டைக் கேட்க ரசிகர்களும் கிடைப்பார்கள்" என்றாள்.

கோபாலனும் பட்டணத்திற்குப் போய் பட்சணக் கடையைத் திறந்தான். அங்கும் ஆரம்பத்தில் கூட்டம் அதிகம் வந்தது. பிறகு குறைந்தது. காரணம் அவன் பாடிக்காட்ட முயன்றதுதான். முடிவில் அங்கு கூட ஒரு நாளுக்கு ஒருவன்தான் அவன் பாட்டைக் கேட்க வரலானான்.

மத்தியான வேளையின் போது கோபாலனுக்கு கடையில் அதிக விற்பனை இருக்கவில்லை. ஒரே ஒரு யாசகன் மட்டும் தினமும் பட்சணக் கடை முன் நின்று தின் பண்டங்களை ஏக்கத்துடன் பார்க்கலானான்.

ஒருநாள் கோபாலன் அந்த யாசகனைக் கூப்பிட்டு "உனக்கு வயிறு நிறையச் சாப்பாடு போடுகிறேன். நீ முதலில் என் பாட்டைக் கேட்கிறாயா?" என்று கேட்டான். அவனும் அதற்கு இணங்கினான். கோபாலன் முதலில் தனக்குப் பிடித்தமான பாட்டைப் பாடி அவனைக் கேட்கச் செய்து விட்டுப் பிறகு சாப்பாடு போட்டான். அவன் திருப்தியாகச் சாப்பிட்டு விட்டுப் போனான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## யுத்த காண்டம்




மற்றும் குரங்குகளைக் கொண்டே "கல்லையும், செடிகளையும், பட்ட மரங்களையும், பாழ்பட்ட முள்களையும் போட்டுப் பாதை அமைக்கலாம்" என்றும் கூறினான்.

குரங்குப்படை அதற்குப் பிறகு உறங்கவே இல்லை; அவை கொண்டு வந்து குவித்த கற்குப்பைகளையும், மரம் செடி கொடி வகைகளையும் நளன் என்னும் தெய்வத் தச்சன், களன் இறங்கி வலிவு மிக்க பாலம் ஒன்று கட்டுவித்தான்; சேதுவின் செய்வினை அவன் கைவினையாய் அமைந்தது. 'அகலத்தில் பத்து யோசனை நீளத்தில் நூறு யோசனை தூரம்' என்று அதற்குக் கல்நாட்டு விழாவில் சொல்நாட்டி வைத்தனர்; கட்டி முடிந்தது; இராமன் வந்து பார்வை இட்டான்.

**போரின் முழக்கம்**

இலங்கைக்குப் படை சென்றது; சென்றது நேசக் கரங்கள் அல்ல; விநாசக் குரங்குகள்; அது அணி வகுத்துத் தொடர்ந்தது; இராமனும் இலக்குவனும் முன்னோடிகளாய் நடந்தனர்; வீடணன், சுக்கிரீவன், மற்றுமுள்ள படைவீரர் அவர்களுக்குத் துணை ஆயினர்.

வெட்ட வெளியை அவர்கள் தங்குமிடமாய்க் கொண்டனர்; சுற்றிலும் மாளிகைகள்; நடுவில் ஒரு பெரிய குன்று; அதில் நின்று எதையும் பார்க்க முடியும்; நளன் என்னும் பெயருடைய தச்சன் அந்தக் குன்றில் தங்க ஒரு பாடி வீடு அமைத்துக் கொடுத்தான் இராமனுக்கு என ஓர் உயரமான பர்னசாலை அமைத்துத் தரப்பட்டது; அங்கு அவன் தம்பியோடு தங்கினான்.

போர்க் கதை தொடக்கமாயிற்று; இராவணன் ஒற்றர் இருவர் குரங்கு வடிவத்தில் அங்கு இறக்குமதி செய்யப்பட்டனர்; சுகன், சாரன் என்ற பெயருடைய அவ்வொற்றர் தாம் கற்ற மாயையால் தம்மை மறைத்துக் கொண்டு திரிந்தனர்; தம்மைக் குரங்குகள் என்றே கருதச் செய்தனர்.

"தேவரே அனையவர் கயவர்; இருவருக்கும் வடிவத்தால் வேறுபாடு இல்லை" என்பார் வள்ளுவர்; அக் குறள்பாட்டைக் காட்டவில்லை; வீடணன் மட்டும் அவர்கள் பால் ஐயம் கொண்டான். பாம்பின் காலைப் பாம்பு அறிந்தது; அனைவர் பார்வையும் அவர்கள் மீது மையம் கொண்டது.

அவர்கள் மந்திர தந்திரம் கற்றவரர்கள்; அவற்றை அறிந்து, வீடணன் வல்லவனுக்கு வல்லவனாய் விளங்கி, அவர்கள் வேடத்தைக் கலைத்தான்; பூசி இருந்த வண்ணக் கலவை நீங்கியது; மை நிறத்து அரக்கராய் வெளிச்சத்தில் வைக்கப்பட்டனர்; அவர்கள் மெய்யைக் காட்டிய பிறகு, 'தாம் யார்?' என்ற மெய்யை உரைத்து விட்டனர்; தாம் அரக்கர் என்பதை இராமனிடம் கூறி, இரக்கம் காட்டும்படி வேண்டினர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிச்சலாக நேர்வழியில் வாழ்ந்தால் பிரச்சினைகளும் கவலைகளும் மட்டுமல்ல, எதிரிகளும் அமைதியாகி விடுவார்கள்.

– நேருஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கட்டுப்பாட்டு விலையால் ஆகப்போவது எதுவுமில்லை

பட்டினிச்சாவை நோக்கி நாடு வேகமாக ஓடுகிறது. சாதாரண மக்களைப் பிழிந்தெடுக்கும் விலையேற்றம் எங்கே போய் முடியும் என்பது விடைகாண முடியாத விசித்திரமாகவே உள்ளது.

இந்தநிலையில் அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி வெளியிடப்பட்டது.

வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்ததும் வர்த்தகர்கள் அதனை அப்படியே கடைப்பிடிப்பர் என்பதுபோல அரசின் நிலைப்பாடு உள்ளது.

ஆனால் நடைமுறையில் கட்டுப்பாட்டு விலையில் அரிசியைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பது பொதுமக்களின் குற்றச்சாட்டு.

நெல்லை உயர்ந்த விலையில் கொள்வனவு செய்துவிட்டு, அரிசியைக் குறைந்த விலையில் விற்பதென்பது எந்தவகையில் சாத்தியமாகும் என்ற கேள்வியை வர்த்தகர்கள் முன்வைக்கின்றனர்.

ஆக, நெல்லின் கொள்வனவு விலை, அரிசியின் விற்பனை விலை என்பன பற்றி இம்மியும் சிந்திக்காமல் அரசாங்கம் அரிசிக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்திருப்பதால் வர்த்தகர்களும் நுகர்வோரும் தேவையில்லாமல் முரண்பட வேண்டியதாக உள்ளதென வர்த்தகர்கள் ஆதங்கப்படுகின்றனர்.

இங்குதான் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையில் அரிசியை வழங்குகின்ற நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

அதாவது குடும்ப அட்டையின் அடிப்படையில் சதொச மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கட்டுப்பாட்டு விலையில் அரிசி வழங்கப்படுமாக இருந்தால்,

ஏனைய வர்த்தகர்கள் அரிசியின் விலை தொடர்பில் ஒரு தீர்மானத்துக்கு வருவர்.

இதைவிடுத்து நான் கட்டுப்பாட்டு விலையை விதிக்கின்றேன். நீ அந்த விலைக்கு அரிசியை விற்கவேண்டும் என்றால் அது ஒருபோதும் நடக்கக்கூடிய விடயமல்ல.

உண்மையில் அரிசியின் விலை என்பது இந்தளவு தூரம் உச்சமடைவதற்கு மூலகாரணம் இன்னும் இரண்டு வாரங்களுக்கு போதுமான அரிசி மட்டுமே கையிருப்பில் உள்ளது என அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் சங்கம் விடுத்த அறிவிப்பாகும்.

இன்னும் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே அரிசி கையிருப்பில் உள்ளது என அரிசி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்த கருத்துத் தொடர்பில் எந்த நடவடிக்கைகளையும் எடுக்காத அரசாங்கம் வெறுமனே கட்டுப்பாட்டு விலையைத் தீர்மானிப்பதால் ஆகப்போவதொன்றுமில்லை.

தவிர, அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை எனும்போது அரிசியின் தரம் மற்றும் வகை என்பன நிச்சயம் தெளிவுபடுத்தப்பட்டிருக்க வேண்டும்.

எனவே அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையைத் தீர்மானித்தபோதிலும் அதனை அமுல்படுத்துவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்காதபோது கட்டுப்பாட்டு விலை என்பது வெறும் கண்துடைப்பு மட்டுமேயன்றி வேறில்லை.

# சகல அரச சேவைகளையும் பிரதேச ரீதியில் பரவலாக்குவது காலத்தின் கட்டாய தேவையாகும்

## ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு

(கொழும்பு)

வீட்டிலிருந்து கடமைகளை நிறைவேற்றுவதைப் போன்று மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் அனைத்து அரச சேவைகளையும் பரவலாக்குவது காலத்தின் தேவையாகும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரச செலவினத்தை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் கொழும்பு, கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆட்களைப் பதிவு செய்தல், குடிவரவு, குடியகல்வு, மோட்டார் போக்குவரத்து திணைக்களம் உள்ளிட்ட பிற அரச நிறுவனங்களையும் மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் பரவலாக்குவதன் மூலம் அந்த சேவைகளை மிகவும் திறமையாக வழங்க முடியும். இவ்வாறான முக்கிய நிறுவனங்களை ஒன்றோடு ஒன்று இணைப்பதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகின் பல நாடுகள் உணவுப் பாதுகாப்பில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றன. நாட்டின் அறுவடை விநியோகத்தின்போது, சுமார் 40 சதவீதம் அழிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கடுமையான அவதானம் செலுத்துவதன் மூலம் பாரியளவிலான உணவுப் பொருட்களை பாதுகாக்க முடியும் அறுவடையை விநியோகிப்பதில் இடைத்தரகர்களின் எண்ணிக்கையை குறைப்பதன் மூலம் விவசாயிக்கும் நுகர்வோருக்கும் நியாயமான விலையை வழங்குவதற்கான சாத்தியங்கள் உள்ளன.

அத்துடன், அரசுக்கு சொந்தமான, பயிரிடப்படாத நிலங்களைக் கண்டறிந்து, பயிர்ச்செய்கையில் ஆர்வமுள்ள இளைஞர்களிடம் விரைவில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். முப்படைகள், சிவில் பாதுகாப்புப் படை மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களமும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடத் தயாராக உள்ளன.

அந்த நிறுவனங்களையும் விவசாயத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் வெற்றிகரமான பிரதிபலன்களை அடைய முடியும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பயிர்ச்செய்கை புரட்சிக்கு இணையாக புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்திப் புரட்சியின் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

சூரியசக்தி மின் உற்பத்தியில் கவனம் செலுத்துவதன் மூலம் தற்போதைய மின்சார நெருக்கடியை விரைவாக நிவர்த்தி செய்வதற்கு நிறுவன ரீதியில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் இந்த சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## நிஷாந்த, பெர்னான்டோ பிணையில் விடுதலை

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த மற்றும் மொரட்டுவை நகர சபை மேயர் சமன்லால் பெர்ணான்டோ ஆகியோர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் தலா 10 மில்லியன் ரூபா சரீரப் பிணைகள் இரண்டின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி அலரி மாளிகை மற்றும் காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.(ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை 17 ஆம் திகதி காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி **யாழ். பிரதேசத்தில்** மணற்கும்பான், மணற்கும்பான் விடுதியடி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** அம்பகாமம், டயலொக் கோபுரம்-ஒலுமடு, கற்கிடங்கு, நீதிபுரம், ஒலுமடு, பழம் வேலியயல் வீதி, பெரிய புளியங்குளம் (தட்சை அடம்பன்), புலிமெச்சினாதிகுளம், புதியநகர் (தட்சை அடம்பன்), தட்சை அடம்பன் (கரிப்பட்டமுறிப்பு) ஆகிய பிரதேச்ங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இடமாற்றம்


(குருநகர்)

யாழ்.பிரதேச இணக்க சபை- 246 இதுவரை காலம் யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தில் நடைபெற்று வந்தது.

தற்போது அப் பாடசாலையின் திருத்த வேலை நடைபெறுவதால் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் நாவாந்துறை சென். மேரிஸ் பாடசாலையில் நடைபெறும் என இணக்க சபைத் தவிசாளர் திருமதி முரளிதரன் கௌரி அறிவித்துள்ளார்.

(4-6-106)

# சத்திய தரிசனம்




## சத்தியம்

❖ அதே காலப்பகுதியில் ஒருநாள் அலுவலகத்தில் கடமையில் மேற்கொள்ளும் போது நான் கதிரையில் உட்கார்ந்த போது எனது உடலில் ஏற்பட்ட இன்பமானது 5-10 நிமிடங்கள் வரை நீடித்தது. நிலைத்தது. நான் சேட் றவுசர் மற்றும் பாட்டா என்பன அணிந்திருந்த போதிலும் இவையெல்லாம் என் உடம்பில் இருக்கின்றதா என்ற உணர்வு இல்லாமல் நான் தொடர்ந்து பல நிமிடங்கள் இன்ப வெள்ளத்தில் தொடர்ந்து மூழ்கினேன். இந்த இன்ப சொர்க்கத்தை வார்த்தைகளால் விபரிக்க முடியாது தடுமாறுகின்றேன். இதைத் தொடர்ந்து அனுபவிக்க சுவாமி விரும்பவில்லை. என்னவோ தெரியாது. நமது சுவாமி அதை நிறுத்திவிட்டார். மீண்டும் பழைய நிலைக்கு வந்துவிட்டேன். இது நமது சுவாமி குறிப்பிடுகின்ற பேரானந்தம் அல்லவா இந்த விடயம்.


❖ 2008 ஆண்டு காலப்பகுதியில் எனது உடலில் இருந்து அபூர்வமான அலைகள் 4-6 நாட்கள் தொடர்ந்து வெளியேறிக் கொண்டிருந்தன. இந்த அலை எனக்கு இன்பத்தை ஏற்படுத்தவில்லை. விளங்கிக் கொள்ள முடியாத ஒரு மர்மமாக இருந்தது. என் உடம்பில் இருந்து ஒருவித அலை வெளியேறுவதை என்னால் நன்றாக உணரக்கூடியதாக இருந்தது. பின்பு குறிப்பிட்ட நாட்களில் இவை அனைத்தும் நின்றுவிட்டன. இங்கு நான் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் நமது ... கவனத்தில் கொள்ளுங்கள். அதாவது மனிதன் ... குறிப்பிடுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 08




போலந்தின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியில் "உக்ரைன்" என்ற வார்த்தையை உச்சரிக்கவே தடை விதிக்கப்பட்டது. அரசு நடைமுறைகள் உள்ளிட்ட எல்லாவற்றிலும் உக்ரைன் மொழியைப் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து உக்ரைன் இன மக்கள் போராடினர். முன்னாள் இராணுவ வீரர்கள், மாணவர்கள் பலரும் ஆயுதம் ஏந்திப் போர் நடத்தினர்.


**1922 இல் உக்ரைனிய சோவியத் சோசலிசக் குடியரசு உருவாகி சோவியத் ஒன்றியத்தின் நிறுவன உறுப்பினர் ஆனது.**

**சோவியத் ஒன்றியம் பற்றி.....**

சோவியத் ஒன்றியம் எனப் பொதுவாக அழைக்கப்பட்ட சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம் என்பது 1922 இல் இருந்து 1991 வரை இருந்த ஒரு சோசலிச நாடாகும். இது போல் ஷெவிக் ரஷ்யாவின் வாரிசாக உருவானது. 1945 இல் இருந்து 1991 இல் கலைக்கப்படும் வரை உலகின் இரண்டு வல்லரசுகளில் இதுவும் ஒன்றாகத் திகழ்ந்தது.

இது, 1917 இல் ரஷ்யப் புரட்சியினால் வீழ்த்தப்பட்ட ரஷ்யப் பேரரசின் எல்லைகளுக்குள் நிறுவப்பட்டு சோவியத் குடியரசுகளின் ஒன்றியமாக விரிவாக்கப்பட்டது.இந் நாட்டின் புவியியல் எல்லை காலத்துக்குக் காலம் மாறி வந்தது எனினும், 1945 இல் இருந்து இது கலைக்கப்படும் வரை ஏறத்தாழ ரஷ்யப் பேரரசின் எல்லைகளுடன் ஒத்திருந்தது எனலாம். எனினும் பேரரசின் பகுதிகளாக இருந்த போலந்தும் பின்லாந்தும் இதற்குள் அடங்கவில்லை.

1917 ஆம் ஆண்டு, சென் பீட்டர்ஸ்பேர்க் நகரில் போல்ஷெவிக் புரட்சியினால் சார் மன்னனின்




சாம்ராஜ்யம் வீழ்ந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பல சுதந்திர நாடுகள் தோன்றின. ஆர்மேனியா, அசர்பைசான், ஜோர்ஜியா போன்ற நாடுகளில் தேசியவாதிகள் ஆட்சியைப் பிடித்தனர். அந்த புதிய தேசங்களின் சுதந்திரம் அதிக பட்சம் ஒரு வருடம் நீடித்திருக்கும். கம்யூனிச போல்ஷெவிக் படைகள் தேவைப்பட்டதால் வன்முறை பிரயோகித்து தேசியவாத அரசுகளை கலைத்து விட்டனர்.

அதற்கு இரண்டு காரணங்கள். தேசியவாதம் எப்போதும் பாட்டாளி வர்க்க ஒற்றுமையைக் குலைக்கும் சக்தியாகவே இருக்கும். மற்றது, பிரிட்டன் போன்ற அந்நிய நாட்டுப் படைகள் இத்தகைய சுதந்திர தேசங்களில் நிலை கொள்ளும் என்ற பயம். (இதற்கு உதாரணமாக . சோவியத் யூனியனின் உடைவுக்குப் பின்னர், பால்ட்டிக் நாடுகளிலும் ஜோர்ஜியாவிலும் நேட்டோப் படைகள் வந்து விட்டமை குறிப்பிடத்தக்கது.) .

எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா போன்ற பால்ட்டிக் நாடுகளில் ஜேர்மன் நாஜிகளுக்கு ஆதரவான சக்திகள் பலமாக இருந்தன. அதே போன்று உக்ரைனில் (ரஷ்ய மொழிக் [illegible] சேர்ந்த) உக்ரைன [illegible] மக்கள்

நாஜி ஆக்கிரமிப்பாளர்களுடன் ஒத்துழைத்தனர். இத்தகைய காரணங்களால், இரண்டாம் உலகப் போரின் பின்னர் குடிசன பரம்பலில் மாற்றங்கள் செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட குடியரசுகளில் ரஷ்யர்களின் குடியேற்றம் அதிகரிக்கப்பட்டது. அதே நேரம் நாஜிகளுடன் ஒத்துழைத்த உள்ளூர்வாசிகள் சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டனர்.

சோவியத் காலத்தில் ஒவ்வொரு குடியரசும் தனக்கென தனியான மொழியைக் கொண்டிருந்த போதிலும், ஆளும் வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் ரஷ்ய மொழியில் பாண்டித்தியம் பெற்றிருந்தனர். குடியரசுகளில் ரஷ்ய மொழி வளர்ச்சி கண்டது அதற்குக் காரணம் ரஷ்ய மொழிப் பாடசாலைகளே சிறந்த கல்வி நிலையங்களாக இருந்ததமை. மற்றைய காரணம் ரஷ்ய மொழியில் பல துறை சார்ந்த வளர்ச்சி காணப்பட்டமை ஆகும்.

பலநூறு மொழிகளைப் பேசும் மக்கள் அனைவரும், பாட்டாளி வர்க்க கொள்கையின் கீழே கொண்டு வரப்பட்டார்கள். கூலித் தொழிலாளிகளின் பிள்ளைகள் கூட உயர் கல்வி கற்று முன்னுக்கு வந்தனர். எல்லோரும் சமமாக நடத்தப்பட்டதால், இன, மொழி ரீதியான முரண்பாடுகள் மிக அரிதாக காணப்பட்டன. முன்னாள் சோவியத் யூனியனில் சோசலிசத்தின்பால் வெறுப்புக் கொண்டவர்களும் வாழ்ந்தனர். அப்படியானவர்கள் எல்லா இனத்தவர் மத்தியிலும் காணப்பட்டனர்.

**பலநூறு மொழிகளைப்பேசும் மக்கள் அனைவரும், பாட்டாளி வர்க்க கொள்கையின் கீழே கொண்டு வரப்பட்டார்கள். கூலித் தொழிலாளிகளின் பிள்ளைகள் கூட உயர்கல்வி கற்று முன்னுக்கு வந்தனர். எல்லோரும் சமமாக நடத்தப்பட்டதால், இன, மொழி ரீதியான முரண்பாடுகள் மிக அரிதாக காணப்பட்டன.**

புரட்சியின் ஆரம்ப காலங்களில் மதவாத சக்திகள் அடக்கப்பட்டன. பின்னர் அரச சார்பு மதகுருக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதனால் மதத்தின் பெயரால் இனப்பிரச்சினை தலைதூக்க முடியவில்லை.

சோவியத் யூனியன் ஒரே நாடாக ஐ.நா. சபையில் அங்கம் வகித்த காலத்தில், அதன் ஒரு பகுதியான பெலாரஸ் தனியான அங்கத்துவம் கொண்டிருந்தது.

அதற்கு காரணம், ரஷ்யாவுக்கு அடுத்ததாக ரஷ்யர்கள் பெரும்பான்மையாக பெலாரஸ் குடியரசில் வசித்தனர். அங்கே தனியாக பெலாரஸ் எனப்படும் மொழியைப் பேசும் மக்கள் வாழ்கின்றனர். இன்றைக்கும் அரச எதிர்ப்பாளர்கள் அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் தான்.

பெலாரஸ் மொழி கிட்டத்தட்ட பொலிஷ் மொழி போன்றிருக்கும். இரண்டாம் உலகப்போர் முடிந்த பின்னர், போலந்தின் மேற்குப் பகுதிகள் பெலாரஸுடன் சேர்க்கப்பட்டன. பிற்காலத்தில் சோவியத் யூனியன் போலந்தின் பகுதிகளை விழுங்கி விட்டது என்று மேற்கில் பிரச்சாரம் செய்யப்பட்டது.

அன்றைய நிலையில், இரண்டு உலகப்போர்களுக்கு காரணமான ஜேர்மனியின் மேலாதிக்கத்தை குறைப்பதற்கு அத்தகைய நடவடிக்கைகள் அவசியமாகக் கருதப்பட்டன.

சோவியத் ஒன்றியம் உலகில் உள்ள அனைத்து நாடுகளுக்குமான முன்மாதிரியாக அமைந்திருந்தது.

நாட்டு அரசும் அரசியல் நிறுவனமும் அனுமதிக்கப்பட்ட ஒரே அரசியல் கட்சியான சோவியத் ஒன்றியப் பொதுவுடைமைக் கட்சியின் கீழேயே இயங்கின.

சோவியத் அரசாங்கம் உக்ரைனிய மொழி மற்றும் கலாசாரத்தை கடுமையான அரசியல் வரம்புகளுக்குள் ஆரம்பத்தில் ஊக்குவித்த போதும் இந்த செயல்முறை 1930 களில் தலைகீழாக மாறியது.

உக்ரைனில் ஹோலோடோமர் என்று அழைக்கப்படும் சோவியத் யூனியன் அரசினால் உருவாக்கப்பட்ட பஞ்சத்தில் மில்லியன் கணக்கானவர்கள் உக்ரைனில் இறந்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ரூ.200 விலை...

லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முடித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

லிட்ரோவின் விலை லாப் நிறுவனத்தின் விலையை போல அதிகரிக்கும் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன, ஆனால் சமீபத்தில் அந்த நிறுவனம் விலையை மிகவும் ஆபத்தான விதத்தில் அதிகரித்தது போல நாங்கள் அதிகரிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## பிரச்சினைக்கு...

வரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் வலியுறுத்தினார்.

நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களுக்கு நேற்று வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் தற்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண வேண்டுமெனில் ஆட்சி மாற்றம் மிகவும் அவசியம். இது மக்களின் பிரதான வேண்டுகோளாக இருக்கின்றது.

ஏனெனில், இந்த அரசின் மீது மக்கள் நம்பிக்கையை முழுமையாக இழந்துவிட்டார்கள் என்று நான் கருதுகின்றேன்.

நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்பட வேண்டுமாயின் நிச்சயமாக அரசில் மாற்றம் ஏற்பட வேண்டும். தற்போதைய அரசால் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது. அது வெளிப்படையாகத் தெரியவந்துள்ளது.

நாட்டினதும் மக்களினதும் நலனில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் திடசங்கற்பத்துடன் செயற்பட்டு ஒருமித்த தீர்மானங்களை எடுத்தால்தான் ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

சர்வதேச சமூகமும் இந்தக் கருமத்தில் அக்கறை காட்டும் என்று நான் நம்புகின்றேன்.

ஏனெனில் தற்போதைய ஆட்சியில் ஒரு மாற்றம் ஏற்பட்டால்தான் சர்வதேச சமூகத்துக்கு எமது நாட்டின் மீது ஒரு நம்பிக்கை ஏற்படும். சர்வதேச சமூகம் சகல வழிகளிலும் எமது நாட்டுக்கு உதவிகளையும் வழங்கும் என்றார். (ம-7)

## விசாரணைகள்...

நடைபெறும் மனித உரிமைகள் பேரவையின் 50ஆவது மாநாட்டில் இந்த குழுவின் சார்பாக அறிக்கை ஒன்றை வாசித்த பிரித்தானியாவின் பிரதிநிதி ரிட்டா ஃப்ரென்ச், இலங்கை அண்மைக் காலமாக முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளை அறிந்திருப்பதாகத் தெரிவித்தார்.

அத்துடன் நீண்டகாலமாக இலங்கையில் நிலவுகின்ற தண்டனைகளில் இருந்து தப்புகின்ற நிலைமை மற்றும் ஊழல்கள் தொடர்பாகவும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். (ம-7)

## மேலும் சில...

அத்துடன் செத்தல் மிளகாய், கடலை மற்றும் நெத்தலி ஆகியவற்றுக்கும் தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த மே மாதம் 6 ஆம் திகதி முதல் அத்தியாவசிய பொருள் இறக்குமதியின் போது இதுவரை பயன்படுத்தப்பட்ட திறந்த கணக்கு அடிப்படையிலான முறையை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

அந்த முறைமை நிறுத்தப்பட்டதன் மூலம் அத்தியாவசிய பொருள் இறக்குமதியின் போது டொலர் பெற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக அத்தியாவசிய பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-7)

## பணம் செலுத்தி...

செயலாளர் சாந்த சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இன்று முதல் முன்பதிவுகளுக்கு அமைய, கொடுப்பனவு செலுத்தப்பட்ட பின்னர் மாத்திரம் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளை கொண்டு செல்ல புதிய முறைமை நடைமுறைப்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இலங்கைக்கு...

வோஷிங்டனில் தூதுவர்களை சந்தித்தபோது, இலங்கைக்கான தூதுவர் மகிந்த சமரசிங்கவை சந்தித்த ஜோ பைடன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உதவுவதற்கு அமெரிக்கா முன்வந்திருப்பது சந்தோசமளிக்கிறது எனத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு நன்றியையும் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஆள முடியாவிட்...

யில்,

"இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக்குவோம் என்றனர். இன்று யாசகம் பெறும் நிலையில் உள்ளோம். சுபீட்சத்தின் நோக்கு என்றார்கள், சுபீட்சம் எங்கே" என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

மக்களுக்குச் சேவையாற்றவே அதிகாரம் வழங்கப்படுகின்றது. அந்த அதிகாரத்தை மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடாது. மக்களுக்குச் சேவையாற்ற முடியாவிட்டால் விலகுவதே சிறந்த செயலாக அமையும்.

மே 09 ஆம் திகதி சம்பவத்தை அனுமதிக்கமாட்டோம். கொலைகள் மற்றும் வன்முறைகளைக் கண்டிக்கின்றோம். ஆனால், அந்த வன்முறை எங்கிருந்து ஆரம்பமானது என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும்" என்றார். (ம-7)

## பெற்றோல், டீசல்...

பெற்றோல் யாழ்ப்பாணம், கொக்குவில், கிளிநொச்சி, மன்னார், திருக்கேதீஸ்வரம் ஆகிய பகுதிகளில் வழங்கப்படவுள்ளது.

அதேவேளை 92 ரக பெற்றோல் இன்று வியாழக்கிழமை சாவகச்சேரி, சுன்னாகம், புலோலி மற்றும் பரமேஸ்வராச் சந்தி ஆகிய இடங்களில் உள்ள எரிபொருள் நிலையங்களிலும் கிளிநொச்சி, மன்னார், புதுக்குடியிருப்பு, வவுனியா ஆகிய பகுதிகளில் உள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் டீசல் யாழ். மாவட்டத்தில் யாழ். நகர், கல்வியங்காடு, தெல்லிப்பளை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன் பகுதியிலும் மன்னார் உயிலங்குளம் ஆகிய பகுதியிலும் பெற்றுக் கொள்ளமுடியும்.

அதேபோல முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன எரிபொருள் நிரப்பு நிலையங்களினூடாக வடமாகாண மக்கள் தமக்கு தேவையான எரிபொருளை பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## அரசிய...

பிரேரணையாக கொண்டுவரப்பட்ட 21 ஆவது திருத்தம் மாத்திரமே தற்போதுள்ள ஒரே ஒரு திருத்தம் என சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மறுசீரமைப்புக்கான தேசிய இயக்கத்தின் பிரதிநிதிகள் குழுவினருடன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இந்நாட்டில் சீர்திருத்தங்களை விட அரசியல் விளையாட்டுகளால் மூழ்கியிருப்பதால் இது பற்றி விவதாதிக்கப்படாத இரண்டாம் பட்ச கவனிப்பே இருப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், தற்போதைய அரசியல் நெருக்கடிக்கான தீர்வு புதிய மக்கள் ஆணையிலேயே தங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நெருக்கடிக்கு சில மாதங்களில் தீர்வு இருப்பதாக சில வீரர்கள் பெருமை பேசினாலும் கூட, உண்மையான நிலைப்பாடு அவ்வாறு இல்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7)

## நாட்டின் பல...

பாணம் அச்சுவேலி பகுதியை சேர்ந்த விவசாயிகள் நேற்று கையெழுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதனிடையே தெமட்டகொட பகுதியில் எரிபொருள் கோரி முன்னெடுக்கப்பட்டிருந்த போராட்டம் காரணமாக குறித்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் கொழும்பு பேஸ்லைன் வீதியில் நேற்று முற்பகல் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எரிபொருளை உரிய முறையில் பெற்றுத்தருமாறு கோரி காலி வீதி தெஹிவளை பகுதியில் வீதியை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் கொழும்பு பஞ்சிகாவத்தை பகுதியில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன் குருநாகல், வவுனியா, மன்னார், பதுளை, ஹட்டன் மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலும் எரிபொருள் கோரி மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தமையினை அவதானிக்க முடிந்தது. (ம-7)



































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பதுக்கலை தடுக்க புதிய சட்டம் உருவாக்கப்படும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

**உணவுப் பதுக்கலைத் தடுக்க புதிய சட்டம் விரைவில் உருவாக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

ஆளுநர்கள், மாகாண செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் ஆகியோர் ஜனாதிபதி மாளிகைக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தனர்.

விவசாயத்துறை, உணவுப் பாதுகாப்பு, பொதுமக்களுக்கான சேவையை செயற்திறனாக்குவதற்கு புதிய முறைகளை அறிமுகம் செய்தல், அனைத்து அரச சேவைகளையும் மாவட்டம் மற்றும் பிரதேச மட்டத்திற்கு பரவலாக்கல், அரசாங்க நிதி முகாமைத்துவம் உள்ளிட்ட பல விடயங்கள் இதன் போது கலந்துரையாடப்பட்டன.

வீட்டில் இருந்து பணியாற்றுதல், அனைத்து அரச சேவைகளையும் மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் பரவலாக்கம் செய்வது காலத்தின் தேவை என ஜனாதிபதி இந்தக் கூட்டத்தின் போது தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ, மத்திய வங்கி உள்ளிட்ட அரச வங்கிகளின் பல்வேறு தரப்பினரை அழைத்து அரிசி ஆலை உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று ஆராய்ந்துள்ளார்.

உணவுப் பொருட்களைப் பதுக்கி வைப்பதை தடுத்து, ஆலை உரிமையாளர்கள் பெருந்தொகை நெல்லை பதுக்கி வைப்பதை கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய சட்டங்களை உருவாக்குவதாக இதன்போது பிரதமர் கூறியுள்ளார். (ம-7)

## யாழ்.பிரதான வீதியில் விபத்து இரு பெண்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் பயணித்த பெண்கள் இருவரை மோதித் தள்ளிவிட்டு வாகனம் ஒன்று தப்பிச் சென்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் பிரதான வீதி மார்ட்டின் வீதிக்கு அண்மித்த பகுதியில் நேற்று இரவு 7.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பெண்கள் இருவர் பயணித்துக் கொண்டிருந்தபோது வேகமாக வந்த் வான் ஒன்று அவர்களை மோதியுள்ளது.

சம்பவத்தில் பெண்கள் இருவரும் காயமடைந்துள்ளனர்.

அவர்கள் இருவரும் அங்கிருந்த மக்களால் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளை மோதிய வாகனம் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில் அதன் இலக்கத்தகடு மோட்டார் சைக்கிளில் சிக்கிய நிலையில் அங்கிருந்தவர்களால் கைப்பற்றப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.(ம-7)

## இலங்கைக்கு 120 மில்லியன் டொலரை கடனாக வழங்க

### அமெரிக்கா அனுமதி

(கொழும்பு)

அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபனத்தின் பணிப்பாளர்கள் சபை இலங்கைக்கு புதிதாக 120 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளது

இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்காகவும் ஆதரவாகவும் 120 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபனத்தின் பணிப்பாளர்கள் சபை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இதனை நேற்று தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சியடைவதற்காகவும் மக்களிற்கு ஆதரவாகவும் கடந்த 70 வருடங்களாக அமெரிக்கா வெளிநாட்டு உதவி கடன்கள் மற்றும் வர்த்தக வாய்ப்புகளை வழங்கியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த அறிவிப்பு தனியார் துறையினருக்கு சிறந்த செய்தி என மேலும் தெரிவித்துள்ள அவர், டிஎவ்சியின் 120 மில்லியன் அமெரிக்க டொலர் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களை சென்றடையும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## வவுனியாவில் எரிபொருள் வழங்கக்கோரி பொதுமக்கள் வீதி மறியல் போராட்டம்

### பொலிஸாருடனும் முரண்பாடு

(வவுனியா)

வவுனியாவில் எரிபொருள் வழங்கக்கோரி பொதுமக்கள் வீதியினை வழிமறித்தமையால் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

வவுனியாவில் நேற்றுக் காலை அநேகமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட்டது.

இந்நிலையில் மன்னார் வீதிச் சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக நேற்றுக் காலை 6 மணிமுதல் பெற்றோலை பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசையில் பொதுமக்கள் கூடி நின்றனர்.

எனினும் பிற்பகல் 3 மணியாகியும் பெற்றோல் அங்கு வழங்கப்படவில்லை. இதனால் பொறுமையிழந்த பொதுமக்கள் ஏ9 வீதி மற்றும் மன்னார் வீதி ஆகியவற்றை வழிமறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் குறித்த வீதிகளுடனான போக்குவரத்து ஒருமணிநேரம் முழுமையாக ஸ்தம்பிதமடைந்திருந்ததுடன், பதற்றமான சூழல் ஏற்பட்டிருந்தது.



சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுற்பட்டனர். இதன்போது பொலிஸாருக்கும், பொதுமக்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

பின்னர் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் இருப்பை உறுதிப்படுத்துமாறு பொது மக்களால் கோரப்பட்டது.

இதனையடுத்து பொலிஸாரால் நிரப்பு நிலையத்தின் எரிபொருள் இருப்பு கண்காணிக்கப்பட்டது. எனினும் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் இருப்பு அற்ற நிலையில் காணப்பட்டது. இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் சற்று நேரத்தில் கலைந்து சென்றனர். காலை முதல் பெற்றோலுக்காக பலமணி நேரம் காத்திருந்த நிலையில் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். (ம-7,200)

## கப்பலுக்கு நாளொன்றுக்கு 18 ஆயிரம் டொலர்

(கொழும்பு)

40 ஆயிரம் மெற்றிக் தொன் உராய்வு எண்ணெய்யை ஏற்றிக்கொண்டு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த கப்பல் நேற்றுடன் 50 நாட்களாக தரித்து நிற்கிறது.

குறித்த எரிபொருள் தாங்கி கப்பல் கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்திருந்தபோதிலும், டொலர் பற்றாக்குறை காரணமாக துறைமுகத்திலிருந்து கப்பலை விடுவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந் நிலையில், அக்கப்பலை நங்கூரமிடுவதற்கு தாமதக் கட்டணமாக நாளொன்றுக்கு 18 ஆயிரம் டொலர்களை செலுத்த வேண்டியுள்ளது.

எரிபொருள் தாங்கி விடுவிக்கப்பட்டிருந்தால், நாட்டிலுள்ள 6 மின் உற்பத்தி நிலையங்களுக்கு தேவையான எரிபொருளை வழங்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-4410)
எமது கிளைகள்
● பயிற்சிக்கால ஊக்கத்தொகை - 20,000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● வேலையின்போது ஆரம்ப சம்பளம் - 25,000/-
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்.
0777-068-777

உடனடி வேலை வாய்ப்பு
யாழ் நகரப்பகுதியில் உள்ள நிறுவனத்தில் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு வேலைக்கு ஆள் தேவை
சம்பளம் - 30'000/-
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.